இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 36 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 29 – செவ்வாய்க்கிழமை 15 செப்டம்பர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 36 : Thiruvalluvar Year - 2057 - Aavani 29 - Tuesday 15 September 2026 - Dak 10 Pages ₹ 5.00

## கோலாகலமாக நடைபெறுகிறது!

# சென்னையில் இன்று தி.மு.க. முப்பெரும் விழா!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விருதுகள் - பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!



**சென்னை, செப். 15 -**

**சென்னையில் இன்று தி.மு.க. முப்பெரும் விழா பிரம்மாண்டமாக அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது. இவ்விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.**

தமிழ்நாட்டின் முதல்வராக அரியணை ஏறிய குறுகிய காலத்திற்குள், சென்னை மாநிலத்துக்குத் “தமிழ்நாடு” என்ற பெயர் மாற்றம்; சுயமரியாதைத் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம்; மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ் - ஆங்கிலம் மட்டும் என்ற இருமொழித் திட்டம் ; ஆகிய மூன்று முத்தான சாதனைகளை நிகழ்த்திக் காட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 15.

இன்றைக்கு நாம், ஆறறிவின் பயனறிந்த மனிதர்களாக, வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வேறுபாடு காணும், பொது அறிவுள்ளவர்களாக, எதிலும் ஏன், எப்படி, எப்போது, எதற்கு என்று கேள்வி மேல் கேள்வி தொடுத்து, அடிப்படை உண்மையைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுபவர்களாக நடமாடுவதற்குக் காரணம், தந்தை பெரியார் அவர்களும், அவராலே உருவாக்கப்பட்ட அறிவுச் சுடர்களின் பகுத்தறிவுப் பரப்புரையே!

“இத்தனை ஆண்டுகளிலும், நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர்; நான் கண்ட தலைவர், கொண்ட தலைவர், பெரியார் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது; அவர், நம் இதயத்திலே நிறைந்த, இதயபூர்வமான தலைவர் ! நமக்கெல்லாம் வழி காட்டியவர் பெரியார்!” என்று பேரறிஞர் அண்ணா அவர்களாலும்

**“பாராட்டிப் போற்றி வந்த பழைமை லோகம்,**

**ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார் !”**

என்று தலைவர் கலைஞர் அவர்களாலும் போற்றப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 17.

திராவிடர் கழகத்திலிருந்து - தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து சென்னை - ராயபுரம் ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில், “திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது. திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக அல்ல. திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது” என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் இயக்கம் துவக்கப்பட்ட நாள் செப்டம்பர் 17.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணா ஆகியோர் பிறந்த நாளையும் தமிழினத்தின் விடிவெள்ளியாக உதித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க நாளையும் இணைத்து கழக முப்பெரும் விழாவாக கொண்டாட வேண்டும் என்று 1985ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். அன்று முதல் இன்று வரை தொடர்ந்து நாம் இந்த விழாவை ஒவ்வொரு ஆண்டும் நடத்திக் கொண்டு வருகிறோம்.

**இந்த ஆண்டுக்கான 2026 தி.மு.க முப்பெரும் விழா - இன்று (15.09.2026 - செவ்வாய்) மாலை 5 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது என்று தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

**விழாவில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு வரவேற்புரையாற்றுகிறார்.**

**கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகிக்கிறார்.**

**கழக விருதுக்காக தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று, பணமுடிப்பு வழங்கப்படுகிறது.**

**விழாவில் விருது மற்றும் பரிசுகள் வழங்கி கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.**

**கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு,**

**துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி, திருச்சி என்.சிவா, ஆ.இராசா, அந்தியூர் ப.செல்வராஜ், மு.பெ.சாமிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.**

**இவ்விழாவில் பெரியார் விருது - கு.செல்லப்பாவுக்கும்**

**அண்ணா விருது - ஜி.கே.சுபாஷ்க்கும்**

**கலைஞர் விருது - திருச்சி சிவா எம்.பி.க்கும்**

**பாவேந்தர் பாரதிதாசன் விருது - கனிமொழி என்.வி.என்.சோமுவுக்கும்**

**பேராசிரியர் விருது - மிசா எஸ். அகமது தம்பிக்கும்**

**மு.க.ஸ்டாலின் விருது - நா.இளையராஜாவுக்கும் வழங்கப்படுகிறது.**

**முரசொலி அறக்கட்டளை சார்பில் “முரசொலி செல்வம் விருது” ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ப.திருமாவேலனுக்கு வழங்கப்படுகிறது.**

இம்முப்பெரும் விழாவில் கழக முன்னணியினர், முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

---

## பெரியார் – அண்ணாவின் பிறந்த நாள் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பது ஏன்?

# காவல்துறை, காவி எஜமானர்களின் Controlக்கு சென்றுவிட்டதா?

## Reels முதலமைச்சரின் அடிமைத்தனத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, செப். 15 -**

**“தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பது ஏன்? காவல்துறை, காவி எஜமானர்களின் Control-க்கு சென்றுவிட்டதா?” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் Reels முதலமைச்சரின் அடிமைத்தனத்திற்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

**தந்தை பெரியாரின் பிறந்த நாளை முன்னிட்டு அவர் பிறந்த ஈரோட்டு மண்ணில் தி.க. சார்பில் செப்டம்பர் 17ஆம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணிக்கும், குடியாத்தத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு தி.மு.கழகம் உள்ளிட்ட கட்சிகள் நடத்த விருந்த பேரணிக்கும், இந்த Circus அரசின் காவல்துறை அனுமதி மறுத்து இருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.**



**முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறை, வலதுசாரி அமைப்புகளின் பேரணிகளுக்கு அனுமதி வழங்கிவிட்டு, தமிழ்நாட்டை செதுக்கிய பெரியார் - அண்ணாவின் பிறந்த நாள் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பது ஏன்?**

**பெரியாரையும், அண்ணாவையும் கொள்கைத்தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் முதலமைச்சர், யாரை திருப்திப்படுத்த இதைச் செய்கிறார்?**

**காவல்துறை, முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? இல்லை அவரது காவி எஜமானர்களின் Controlக்கு சென்றுவிட்டதா?**

**பெரியார் - அண்ணாவை புறக்கணிக்கும் Reels முதலமைச்சர், அவருடைய அடிமைத்தனத்தையும் ஆணவத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, உடனே இந்த பேரணிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### பின்வாங்கிய காவல் துறை!

இதற்கிடையே எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்த நிலையில் பேரணிக்கு காவல் துறை அனுமதி மறுத்தது என்பது தவறான செய்தி என்று பின்வாங்கி தற்போது அனுமதி அளிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

அதேபோல், குடியாத்தத்திலும் அண்ணா பிறந்த நாள் பேரணிக்கு காவல்துறை அனுமதி வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.